1979 ஏப்ரல் 9] [9] அறிவிப்பு

மைய அரசு திரு. ஆசைத்தம்பியின் உடலைக் கொண்டுவர தனி விமானம் ஏற்பாடு செய்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பு. டெல்லியில் இருந்து திரு. பாலா பழனூர், எம்.பி. அவர்களிடமிருந்து வந்து இருக்கும் செய்தி. அதை நான் அவை முன்னால் அறிவிக்க விரும்புகிறேன். எனக்கு செய்தியாக அது வந்து இருக்கிறது. டெல்லி பாராளுமன்றத்தில் மறைந்த ஆசைத்தம்பி அவர்களுக்கான இரங்கல் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் திரு. பாலா பழனூர், திரு. ஆலடி அருணா, திரு. மோகனசுந்தரம், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. கோபால் ஆகியோர் திரு. ஆசைத் தம்பியின் உடல் விமானம் மூலம் உடனே கொண்டுவர ஒப்புக் கொள்ளும் வரையில் சபையை நடத்த விடமாட்டோம் என்று வற்புறுத்தியதன் பேரில் திரு. சரன்சிங் அவர்கள் இன்றைக்கே பாதுகாப்பு விமானம் மூலம் கொண்டுவர ஒப்புக் கொண்டார் என்ற செய்தி எனக்கு வந்து இருக்கிறது. அதை இந்த அவைக்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

(8) வரவு செலவுத் திட்டம் 1979-80— வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

திரு. நா. சுந்தரராஜ்: அதற்காக அங்கே இருக்கின்ற நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

புதுக்கோட்டை மாவட்டம் ஒரு சிறிய மாவட்டம். அந்த மாவட்டத்தோடு சில பகுதிகளை, காரைக்குடி பகுதியை எல்லாம் இணைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து ஆர். பாலக்குறிச்சியைப் பிரிக்க வேண்டுமென்ற கோஷம் ஒரு பக்கம் இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தோடு இன்னும் சில பகுதிகளைச் சேர்க்க வேண்டுமே தவிர அங்கிருந்து எந்தப் பகுதியையும் பிரிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தமட்டில் தலைவர் காமராஜ் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். "கடவுளை எதிர்த்தாலும் எதிர்க்கலாம்; ஆனால் கணக்கரை எதிர்க்க